BETHSHAN
SPECIAL SCHOOL
Since 1996
{ For the Intellectual & Developmental Disabilities }
Recognized by the State & Central Govt.
Run by The Evangelical Baptist Mission, Regn. No : 2555 / 95
Post : No - 3 / 369 - B, Sikkandar Chavadi, Madurai - 625 018.
Call : 0452 - 2 660 770 ; 98949 28666 | Website : www.bethshanschool.org | E-mail : bethshanschool@gmail.com

# 2012 - 13 அரையாண்டுச் செய்தி



அன்புடையீர்,

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

பெத்சான் சிறப்பு பள்ளி கடந்த 16 ஆண்டுகளாக மனவளர்ச்சிக் குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு உங்களின் பேராதரவுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இக்கல்வியாண்டில் எமது பள்ளியின் மூலம் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பினை உங்களுக்கு வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பல வருடங்களாக நமது பள்ளியில் அநேக மாணவர்களை சேர்த்து அவர்களுக்கு சிறப்பு கல்வி அளிக்க முடியாத நிலையிருந்து வந்தது. கடந்த வருடம் நாம் புதிதாக கட்டிடம் கட்டும்படி கடவுள் நமக்கு கிருபை செய்தார். ஆகவே, இவ்வருடத்தில் மேலும் பல புதிய மாணவர்களை பள்ளியில் சேர்த்து அவர்களுக்கு நமது சேவையை அளிக்கும் வகையில் இரண்டு ஷிப்டுகளாக பிரித்து சேவையளித்து வருகின்றோம். தற்போது பள்ளியில் 77 மாணவ, மாணவியர்கள் கல்வி கற்று வருகின்றனர்.




பள்ளி மாணவர்களின் வளர்ச்சிக்காக நீங்கள் தொடர்ந்து செய்து வரும் அனைத்து உதவிகளுக்கும் குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் இந்த சிறப்பு குழந்தைகளிடம் காண்பித்து வரும் அன்பிற்கும், ஆதரவிற்கும் கடவுள் எல்லா விதமான நன்மைகளையும், ஆசிர்வாதங்களையும் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் எந்நாளும் தருவாராக. மேலும் நீங்கள் செய்து வரும் தொழிலையும் பன்மடங்கு உயர்த்துவாராக. வரும் நாட்களிலும் உங்களின் அன்பையும், ஆதரவையும் தொடர்ந்து இக்குழந்தைகளிடம் காண்பிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு

R.ரவிக்குமார்
முதல்வர்



2013 ஆம் சர்வதேச குளிர்கால சிறப்பு ஒலிம்பிக் போட்டிக்கு எமது பள்ளி மாணவன் பாலு தேர்வு

கர்மவீரர் காமராஜரின் பிறந்த தினத்தை முன்னிட்டு எமது பள்ளி மாணவர்களுக்கு SVN கல்லூரி நிர்வாகிகள் & மாணவர்கள் கல்வி உபகரணங்கள் மற்றும் இனிப்புகளை கொடுத்து தங்கள் அன்பை வெளிப்படுத்தினார்கள்.



## புரிந்துணர்வு ஒப்பந்தம்

பெத்சான் சிறப்பு பள்ளி
&
லேடி டோக் கல்லூரி

பெத்சான் சிறப்பு பள்ளி மற்றும் லேடி டோக் கல்லூரிக்கு இடையிலான மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கான கல்வி மற்றும் சமூக சேவையை இணைந்து செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கல்லூரி முதல்வர் டாக்டர்.மெர்ஸி புஷ்பலதாவும் பெத்சான் பள்ளியின் நிர்வாக அறங்காவலர் போதகர்.ஸ்டீபன்சன்னும் கையெழுத்திட்டார்கள்.

We Teach God Helps

# நிகழ்வுகளின் செய்தி தொகுப்பு - 2012



ஜுன் 29&30 ஆகிய தேதிகளில் சிறப்பு ஒலிம்பிக் போட்டிகள் பற்றிய இரண்டாம் நிலை பயிற்சி வகுப்புகள் இந்திரா காந்தி திறந்த வெளி பல்கலையுடன் இணைந்து நடத்தினோம். இதனை IGNOU மண்டல இயக்குனர் Dr. சண்முகம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். பயிற்சி வகுப்புகளை சிறப்பு ஒலிம்பிக் மாநில இயக்குனர் Dr..பால் தேவசகாயம் அவர்கள் நடத்தினார்கள். போச்சி விளையாட்டு பற்றிய செயல்முறை விளக்கம் பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்பட்டது.

ஆகஸ்டு 9 ம் தேதி கைத்தறி நகரில் மனவளர்ச்சி குறைந்த மாற்றுத்திறனாளிகளுக்கான பொது மருத்துவம் மற்றும் அரசு நலத்திட்ட ஆலோசனை வழங்குதல் முகாமை நமது பள்ளி, வடமலையான் மருத்துவமனை மற்றும் C.S.I.ஜெயராஜ் அன்னபாக்கியம் செவிலியர் கல்லூரி இணைந்து நடத்தியது. இதனை வடமலையான் மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் Dr. புகழகிரி அவர்கள் துவக்கி வைத்தார்கள். C.S.I.J.A.செவிலியர் கல்லூரி முதல்வர் Dr. ஜோதிஷோபியா, பள்ளியின் தலைவர் திரு.ஜெயசீலன் அவர்கள் கலந்துக்கொண்டனர்.





இக்கல்வியாண்டின் முதல் பருவத்தில் நடைபெற்ற பெற்றோர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில் மனவளர்ச்சி குறைந்த குழந்தைகளிடம் காணப்படும் பேச்சு குறைப்பாடுகளை எவ்விதம் கண்டறிந்து அதனை எப்படி சரிசெய்வது என்பது பற்றி மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையின் பேச்சுப் பயிற்சியாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள் பெற்றோர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள்.

ஆகஸ்டு 15 ம் தேதி நமது பள்ளி வளாகத்தில் தேசத்தின் 65 வது சுதந்திர தினவிழாவானது மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பெனிட் & கோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு.பெனிட்கரன் அவர்கள் தேசிய கொடியை ஏற்றி சுதந்திரதின செய்தியை மாணவர்களோடு பகிர்ந்து கொண்டு, அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பும், பரிசும் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்கள். பள்ளியின் தலைவர் ஜெயசீலன் அவர்கள் உடன் இருந்தார்கள்.





முதல் முறையாக நமது பள்ளி மாணவர்கள் கல்வி சுற்றுலாவாக ஏர் இந்தியா விமானத்தில் 41 பேர்கள் பயணம் செய்தனர். கேரளாவிலுள்ள கொச்சின் என்ற இடத்திற்கு சென்று அங்குள்ள சுற்றுலாத் தலங்களை பார்வையிட்டு வந்தனர். இந்நிகழ்வு மாணவர்களின் சமூக திறனை மேம்படுத்தவும், புதிய இடங்களை பார்த்ததின் மூலம் பல அரிய அனுபவங்களை பெற்று பெரும் மகிழ்ச்சியடைந்தனர்.

மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கும் வகையில் அவர்களுக்கு தொடுதல், பார்த்தல், கேட்டல் போன்ற உணர்வுகளை அதிகப்படுத்தும் நோக்கில் மதுரையில் உள்ள விஷால் தி மால், கண்ணன் டிப்பாரட்மென்டல் ஸ்டோர், வைகை அணை, தேசிய கண்காட்சி சிறப்பு ரயில்கள், ராஜாஜி பூங்கா மற்றும் பல்வேறு இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டனர். அங்குள்ள லிப்ட் & எஸ்கலேட்டரில் ஏறிச்சென்ற புதிய அனுபவத்தையும் பெற்றார்கள். பணத்தின் மதிப்பு & பொருட்களின் விலை விபரங்களை அறிந்து கொண்டார்கள்.





2013 - ல் வடகொரியாவில் நடைபெறும் சர்வதேச குளிர்கால புளோர் ஹாக்கி விளையாட்டில் இந்திய அணி சார்பில் விளையாடுவதற்கு நமது பள்ளி மாணவர் பாலு தேர்வு செய்யப்பட்டுள்ளார். சிறப்பு ஒலிம்பிக் பாரத் அமைப்பின் தேசிய அளவிலான பயிற்சி முகாம் ஆகஸ்டு மாதத்தில் செகந்திராபாத்திலும், செப்டம்பர் மாதத்தில் ஏலகிரியிலும் மற்றும் நவம்பர் மாதத்தில் கோவாவிலும் நடைபெற்றது. இதில் நம் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அக்டோபர் 11 ம் தேதி உலக மனநல நாளன்று தி கேட்வே ஹோட்டலும், பெத்சான் பள்ளியும் இணைந்து மாவட்ட அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை மாணவர்களுக்கு நடத்தியது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும், பரிசுகளும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டது. சிறப்பு விருந்தினராக Dr.பெரிஸ் மகேந்திரவேல், தி கேட்வே ஹோட்டலின் பொது மேலாளர் திரு.தேவ்ராஜ், பெனிட் & கோ அமைப்பின் நிர்வாக இயக்குனர் திரு.பெனிட்கரன் மற்றும் Dr.விஜய சரவணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.





நமது பள்ளி மாணவர்களும், பாத்திமா கல்லூரி மாணவிகளும் இணைந்து சமச்சீர் உணவு வகைகளை தயாரிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதன் மூலம் நமது பள்ளி மாணவர்கள் சமூகத்தில் மற்றவர்களோடு கலந்து போட்டியிடும் திறனையும், இணைந்து செயல்படும் விதங்களையும் கற்றுக் கொண்டனர். கலந்து கொண்ட அனைத்து மாணவர்களையும் பாத்திமா கல்லூரியின் முதல்வர் Sr. ஜோஸ்பின் அவர்கள் பாரட்டி, பரிசு வழங்கினார்கள்.

டிசம்பர் 3 ம்தேதி உலக மாற்றுத்திறனாளிகள் தினம் அனுசரிக்கப்படுகின்றது. இந்நாளில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சியில் மனவளர்ச்சி குறைந்தோர்களை ஆரம்ப நிலையில் எவ்வாறு கண்டறியலாம் என்பது பற்றிய விழிப்புணர்வு கைப்பிரதியை மதுரை மாநகர சட்டம் & ஒழுங்கு ஆணையர் திரு.R.திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட அதன் முதல் பிரதியை கல்யாணி அசோசியேட்ஸ் நிர்வாக இயக்குனர் திரு.L.முரளிகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்கள்.





உலக மனநல நாளின் போது மனவளர்ச்சி குறை பற்றியதான விழிப்புணர்வு செய்திகளை பொது மக்களிடம் ஏற்படுத்தும் நோக்கோடு மாபெரும் கையெழுத்து இயக்கம் அக்டோபர் 10 முதல் 15 தேதி வரை நடைபெற்றது. இதில் C.S.I. செவிலிய கல்லூரி, லேடி டோக் கல்லூரி மாணவிகள் பொதுமக்களிடம் மனவளர்ச்சி குறை பற்றியதான விழிப்புணர்வு கைப்பிரதியை கொடுத்து அவர்களிடம் உறுதிமொழி பெற்றுக் கொண்டதற்கு அடையாளமாக கையெழுத்து வாங்கினார்கள்.

மதுரை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் மூலம் நமது பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தினர். விழாவில் மதுரை மாவட்ட முதன்மை நீதிபதி திரு.கோகுல்தாஸ், ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு திரு.வடமலை, கூடுதல் தலைமை ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு திரு.தங்க மாரியப்பன் மற்றும் ஆணைக்குழுவின் செயலாளரான சார்பு நீதிபதி ஜெஸிந்தா ஆகியோர் கலந்து கொண்டு பள்ளிக்குழந்தைகளுக்கு கேரம், பூப்பந்து, கைப்பந்து மற்றும் மின் விசிறிகள் வழங்கினார்கள்.

